சுருக்கம்

பள்ளிக்கல்வி – பொது நூலகங்கள் – 2017–18–ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள் – “தஞ்சாவூர் மாவட்டத்தில் தமிழிசை, நடனம் மற்றும் நுண்கலைகள் குறித்த சிறப்பு நூலகம் மற்றும் காட்சிக்கூடம்” அமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக்கல்வி (பொ.நூ.1)த்துறை

அரசாணை (நிலை) எண்.72 நாள் 16.04.2018

திருவள்ளுவராண்டு, 2049
விளம்பி வருடம், சித்திரை– 03

படிக்கப்பட்டது:–

பொது நூலக இயக்குநரின் கடித ந.க.எண்.5894/உ1/2017, நாள் 19.02.2018.

~*~~*~

ஆணை:–

2017–18–ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்:–

> “தமிழகத்தின் பல்வேறு நகரங்களில் தனித்தன்மை வாய்ந்த பொருள் சார்ந்த நூலகங்கள் மற்றும் காட்சிக்கூடங்கள் அமைக்கப்படும். சிந்து சமவெளி நாகரிகம் உள்ளிட்ட பழம்பெரும் நாகரிகங்கள் குறித்த சிறப்பு நூலகம் மற்றும் காட்சிக்கூடம் சிவகங்கை மாவட்டம் கீழடியிலும், தமிழிசை, நடனம் மற்றும் நுண்கலைகள் குறித்து தஞ்சாவூரிலும், நாட்டுப்புறக் கலைகள் சார்ந்து மதுரையிலும், தமிழ் மருத்துவம் சார்ந்து திருநெல்வேலியிலும், பழங்குடியினர் பண்பாடு சார்ந்து நீலகிரியிலும், கணிதம், அறிவியல் சார்ந்து திருச்சியிலும், வானியல், புதுமைக் கண்டுபிடிப்புகள் சார்ந்து கோயம்புத்தூரிலும், அச்சுக்கலை சார்ந்து சென்னையிலும் இவை அமைக்கப்படும். மேற்கண்ட சிறப்பு நூலகங்கள் மற்றும் காட்சிக் கூடங்கள் ஒவ்வொன்றும் ஒரு கோடி செலவில் மொத்தம் ரூ.8 கோடி செலவில் அமைக்கப்படும்”.

2. பொது நூலக இயக்குநர் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாட்டின் பாரம்பரியம் மிக்க இசை கருவிகளான வீணை, மிருந்தங்கம், தவில், நாதஸ்வரம், தபேலா, குழல், தப்பு, உருமி, பம்பை போன்றவற்றை காட்சிப்படுத்துவது மற்றும் பரதநாட்டியம் தொடர்பான பல்வேறு நிலைகளை வண்ண வடிவங்களில் பொது மக்கள் அறியும் வகையில் காட்சிப்படுத்துவது, மேலும், நுண்கலைநயமிக்க கல் மற்றும் மரத்தால் ஆன கலைச்சிற்பங்கள், வண்ண ஓவியங்கள், உலோகத்தால் ஆன கலைநயமிக்க பல்வேறு விதமான நுண்கலை பொருட்களை காட்சிப்படுத்தி இன்றைய தலைமுறையினருக்கு கொண்டு செல்வதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவது மிகவும் அவசியமாகும் என்பதால், இது சார்ந்த சிறப்பு நூலகத்தினை தஞ்சாவூர் மாவட்ட மைய நூலகத் தரைத்தளத்தில் 672 சதுரடியில் தமிழிசை, நடனம் மற்றும் நுண்கலைகள் சார்ந்த சிறப்பு நூலகம் மற்றும் காட்சிக்கூடம் அமைக்கவும், அதற்கு

(த.பி.பா)

தேவையான உள்கட்டமைப்பு பணிகள் மற்றும் இதர செலவினங்களை கீழ்க்கண்டவாறு மேற்கொள்வதற்கான செலவினம் ரூ.56,32,977/-ஐ (ரூபாய் ஐம்பத்தாறு இலட்சத்து முப்பத்திரண்டாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து ஏழு மட்டும்) தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக நிதியிலிருந்து பெற்று மேற்கொள்ளவும் அனுமதி அளித்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்:-

| வ. எண் | நிறுவனம் | பணிகள் விவரம் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட கட்டுமானம் பராமரிப்பு, கோர்ட் ரோடு, தஞ்சாவூர். | காட்சிக் கூடம் அமைப்பதற்கான Partition பணிகள் மேற்கொள்ளுதல். | 7,56,000/- |
| 2. | செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட கட்டுமானம் பராமரிப்பு, கோர்ட் ரோடு, தஞ்சாவூர். | காட்சிக் கூடத்திற்கு ஜெனரேட்டருடன் கூடிய மின் பணிகளுக்காக. | 24,71,000/- |
| 3. | தஞ்சாவூர் மேற்கு சர்வோதயா சங்கம், காதி கிராமோத்யோக் பவன், 1036, தெற்கு வீதி, தஞ்சாவூர். | தேக்குமர மேடை பகுதிப் பணிகள். | 15,45,653/- |
| 4. | பூம்புகார் விற்பனை நிலையம், நகராட்சி அலுவலகம் எதிரில், காந்திஜி சாலை, தஞ்சாவூர். | கைவினை பொருட்கள் நுண்கலைகள் இசைக் கருவிகள் | 3,73,645/- |
| 5. | ஸ்ரீ டிஜிட்டல் போட்டோஸ் & வீடியோஸ், 480, கவாஸ்காரத் தெரு, கீழவாசல், தஞ்சாவூர். | நடனம் தொடர்பான நிழற் படங்கள் எண்ணிக்கை-15 | 95,000/- |
| 6. | மேலாளர், எல்காட் நிறுவனம், 692, அண்ணா சாலை, நந்தனம், சென்னை. | கணிப்பொறி UPS, கம்ப்யூட்டர் டேபிள், ஸ்பீக்கர், பிரிண்டர். | 3,91,679/- |
| | | **மொத்தம்** | **56,32,977/-** |
| **(ரூபாய் ஐம்பத்தாறு இலட்சத்து முப்பத்திரண்டாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து ஏழு மட்டும்)** | | | |

3. மேற்காணும் பொது நூலக இயக்குநரின் கருத்துரு அரசால் ஆய்வு செய்யப்பட்டு அதனை ஏற்று, தஞ்சாவூர் மாவட்ட மைய நூலக தரைத்தளத்தில் 672 சதுரடியில் “தமிழிசை, நடனம் மற்றும் நுண்கலைகள் சார்ந்த சிறப்பு நூலகம் மற்றும் காட்சிக்கூடம்” அமைப்பதற்கான அனுமதியும் அதற்கான செலவினத் தொகையான ரூ.56,32,977/-ல் தஞ்சாவூர் மாவட்ட மைய நூலக கட்டடத்தில் ஏற்கனவே மின் இணைப்பு உள்ள நிலையில், இக்காட்சிக்கூடத்திற்கு தேவையான ஒயரிங் பணிகளை மேற்கொள்ளலாம் என்பதால், ஜெனரேட்டருடன் கூடிய மின் பணிகளுக்கான செலவினத் தொகையான ரூ.24,71,000/- நீங்கலாக ஏனைய இனங்களுக்கான செலவினத் தொகையான ரூ.31,61,977/-ஐ (ரூபாய் முப்பத்தொரு இலட்சத்து அறுபத்து ஒன்றாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து ஏழு மட்டும்) தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக நிதியிலிருந்து பெற்று மேற்படி பணிகளை மேற்கொள்ள பொது நூலக இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

(த.பி.பா)

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.758/ கூ.த.செ.(நிதி)/2018, நாள் 02.03.2018ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பொது நூலக இயக்குநர் (கூ.பொ), சென்னை – 2.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்,
சென்னை–6.
<u>நகல்</u>
முதன்மைச் செயலாளர்,
சிறப்புத் திட்ட அமலாக்கத்துறை, சென்னை–9.
நிதி (கல்வி–II)த்துறை, சென்னை–9.
பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் அவர்களின்
முதன்மைச் தனிச் செயலர், சென்னை–9.
பள்ளிக்கல்வி (வரவு செலவு)த்துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

4/10